©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 145] CHENNAI, THURSDAY, MAY 20, 2010
Vaikasi 6, Thiruvalluvar Aandu–2041

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### பொதுத் துறை

**(மிக கமுக்கம்)**

**1967ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்தல் பற்றிய அறிவிக்கை.**

*[அரசாணை (பல்வகை) எண் 446, பொது (மிக கமுக்க)த் துறை, நாள் 17 மே 2010.]*

**No. II(1)/PUSC/10(a)/2010.**

புதுதில்லி, மத்திய அரசு, உள்விவகாரத்துறை அமைச்சகத்தின் 14–5–2010 ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஓ. 1090(ஈ) மீண்டும் வெளியிடப்படுகிறது:—

**எஸ்.ஓ.1090(ஈ):**—தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (இனி எல்.டி.டி.ஈ, என குறிப்பிடப்படுவர்) உண்மையில் இலங்கையைத் தளமாக கொண்ட ஒரு அமைப்பாகும். ஆனால், இந்த அமைப்பிற்கு இந்திய மண்ணில் அனுதாபிகளும், ஆதரவாளர்களும், முகவர்களும் இருப்பதாலும்;

மேலும், தமிழர்கள் அனைவருக்கும் என ஒரு தாய்நாட்டை (தமிழ் ஈழம்) உருவாக்குவதென்ற எல்.டி.டி.ஈ.–யின் நோக்கம் இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அமைவதோடு இந்திய நாட்டிலிருந்து அதன் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதற்கும், பிரித்துக் கொடுப்பதற்கும் ஒப்பானதாகும் என்பதாலும், எனவே, அது ஒரு சட்ட விரோத நடவடிக்கையின் வரம்பிற்கு வருவதாலும்;

தடை விதிக்கப்பட்டிருந்தும், எல்.டி.டி.ஈ ஆதரவு சக்திகள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் முதலியவற்றை நடத்தி, எல்.டி.டி.ஈ இயக்கத்திற்கும், அதன் நோக்கத்திற்கும் ஆதரவு திரட்ட இலங்கையில் நிலவும் கொந்தளிப்பை பயன்படுத்திவருவது அமைதியற்ற நிலையை உருவாக்கி, தமிழகத்தில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாலும்;

இலங்கையில் எல்.டி.டி.ஈ. யினர் படுகொலை செய்யப்பட்ட போதிலும், எஞ்சியுள்ள எல்.டி.டி.ஈ. போராளிகள் / தலைவர்கள் தமிழ் ஈழத்தை, உருவாக்கும் நோக்கத்துடனும் “நம்பிக்கை துரோகிகள்” (இந்திய அரசு) மற்றும் “எதிரிகளை” (இலங்கை அரசு) பழிவாங்கும் நோக்கத்துடன் தமிழகத்தில் ஒன்று சேர்ந்து வருகின்றனர் என்பது அண்மை அறிக்கைகளிலிருந்து தெரிய வருவதாலும்;

அண்மையில் இந்தியாவிற்குள் நுழையத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட எல்.டி.டி.ஈ போராளிகள் சிலர் கள்ளத்தோணியில் ஏறி வந்துள்ளதால், எஞ்சிய போராளிகள் இந்தியாவில் குறிப்பாக, தமிழ்நாடு மாநிலத்தை தாங்கள் ஒன்று சேர்ந்து திட்டம் வகுக்கும் தளமாக பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதை ஒதுக்கிவிட முடியாது என்பதாலும், கடல் வழியாகவும், முறையான ஆவணங்களையும் பயன்படுத்தி, இலங்கை தமிழ் அகதிகள் என்ற போர்வையில் இந்தியாவிற்குள் நுழைந்துவிடும் வாய்ப்புக்கள் இருப்பதைத் தள்ளிவிட முடியாது என்பதாலும்;

உலகம் முழுவதும் பரவியுள்ள எல்.டி.டி.ஈ–யினர், இணையதளத்தில் கட்டுரைகள் வெளியிடுவதன் வாயிலாக, எல்.டி.டி.ஈ யின் தோல்விக்கு இந்திய நாட்டின் உயர் அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் தான் காரணம் எனக் கூறி, இலங்கை தமிழர்களிடையே இந்திய விரோதப் போக்கை தொடர்ந்து பரப்பி வருகின்றனர். இணையதளம் மூலமாக தொடர்ந்து செய்யப்படும் இத்தகைய பிரச்சாரம் இந்தியாவின் உயர் பெருமக்களின் பாதுகாப்பை மிகவும் பாதிப்பதாலும்;

மேற்சொன்ன காரணங்களுக்காக எல்.டி.டி.ஈ அமைப்பு ஒரு சட்ட விரோத அமைப்பு என்றும், இத்தகைய பிரிவினைவாத நடவடிக்கைகள் அனைத்தையும் இயன்ற வகையிலெல்லாம் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத் தேவை தொடர்ந்து உள்ளது என்றும், மத்திய அரசு கருதுவதாலும்; மேலும்,

(i) தமிழகத்தில், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட எஞ்சியுள்ள எல்.டி.டி.ஈ. போராளிகள், அதை விட்டு விலகியவர்கள், அனுதாபிகள் ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்து விசாரித்ததில், தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்ட இந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள், எல்.டி.டி.ஈ. இயக்கத்தினரால் எப்படியேனும் சட்ட விரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவர் என்று தெரிய வருவதாலும்;

(ii) தடையாணை செயலில் இருந்தும், இந்தியாவில் எல்.டி.டி.ஈ ஆதரவு இயக்கங்கள் மற்றும் தனி மனிதர்களின் நடவடிக்கைகள் காணப்பட்டதாலும், இந்த சக்திகள் எல்.டி.டி.ஈ இயக்கத்திற்கு தங்களது ஆதரவை விரிவுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டதாலும்;

(iii) இந்த அமைப்பு குறித்த இந்தியாவின் கொள்கை மற்றும் அவர்களுடைய செயல்களை ஒடுக்குவதில் மாநில நிர்வாகத்தின் நடவடிக்கை ஆகியவை குறித்து எல்.டி.டி.ஈ தலைவர்கள், இயக்கத்தினர் மற்றும் ஆதரவாளர்கள், வெறுப்புற்றிருக்கிறார்கள் என்றும், மத்திய அரசுக்கு தகவல் கிடைத்துள்ளதாலும்;

எல்.டி.டி.ஈ அமைப்பின் மேற்சொன்ன நடவடிக்கைகள் இந்திய இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், பொது அமைதிக்கும், தொடர்ந்து அச்சுறுத்தலாகவும் குந்தகம் விளைவிப்பதாகவும் கருதி, இவ்வமைப்பு ஒரு சட்ட விரோதமான அமைப்பு என அறிவிக்கப்பட வேண்டுமென்றும் மத்திய அரசு கருதுவதாலும்;

மேலும், (i) எல்.டி.டி.ஈ அமைப்பின் தொடர்ந்த வன்முறை மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் குந்தகம் விளைவிப்பதாக இருப்பதாலும், (ii) இவ்வமைப்பு இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால், இந்திய மக்களின் பாதுகாப்பிற்கு தொடர்ந்து பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாலும், எல்.டி.டி.ஈ அமைப்பை சட்ட விரோதமான அமைப்பாக உடனடியாக அறிவிப்பது அவசியம் என்று மத்திய அரசு கருதுவதாலும்;

எனவே, தற்போது **1967** ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் **(37/1967) 3** ஆம் பிரிவின் **(1)** உட்பிரிவிலும், **(3)** உட்பிரிவின் வரம்பு நிபந்தனைகளிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பை (எல்.டி.டி.ஈ) சட்ட விரோத அமைப்பாக இதனால் அறிவிக்கிறது. மேலும், மேற்சொன்ன சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், பிறப்பிக்கப்படக்கூடிய எந்த ஒரு ஆணைக்கும் உட்பட்டு, இந்த அறிவிக்கை ***அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து உடனடியாக செயலுக்கு வரும் என்று இதனால் கட்டளையிடுகிறது.

[எஃப் எண். I-11034/1/2010-IS.I]

**தர்மேந்திர சர்மா,**
*இணைச் செயலாளர்.*

**கே.எஸ். ஸ்ரீபதி,**
*அரசு தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU